IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT MUNSIF,
THIRUMANGALAM.
O.S.No.49/2009
DEPOSITION OF WITNESS

<u>வா.சா.1 சாட்சி முருகன் த.பெ.ஆறுமுகம்</u>

**Solemnly affirmed and sworn by Thiru.E.Manikandan, B.A.,B.L, Principal District Munsif (FAC) on 17.02.2026 in accordance with the provisions of Act XX141.**

<u>1ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u> :

1. எனது பெற்றோர் உயிருடன் இருந்தபோது அசல் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரிதான். தற்போது எனது பெற்றோர்கள் இறந்துவிட்டார்கள் என்றால் சரிதான். அசல் வழக்கில் எனது பெற்றோருக்கு நான் ஒருவன் மட்டுமே மகன் என்று குறிப்பிட்டுள்ளது தவறு என்றால் சரிதான். ஆனால் அவ்வாறு குறிப்பிடவில்லை.

2. தாவா சொத்து என்பது எனது தந்தை கிரையம் பெற்ற சொத்துக்கு தென் பகுதியில் அமைந்துள்ள சந்து என்றால் சரிதான். எனது பெற்றோர் கிரையம் பெறுவதற்கு முன்பாக மேற்படி கிரைய சொத்தானது மருத்துவ மடமாக இருந்தது என்றால் சரியல்ல. பெற்றோர் கிரையம் பெறுவதற்கு முன்பாக உள்ள எனது பெற்றோரின் கிரைய சொத்து சம்பந்தமான முன் ஆவணங்களை தாக்கல் செய்யவில்லை என்றால் எனது பெற்றோருக்கு கிரையம் கொடுத்தவர்களுக்கு அது பூர்வீக சொத்தாகும்.

3. எனது பெற்றோர்கள் கிரையம் பெற்ற 2 சொத்துக்களும் வாசல் வடக்கு பக்கம் படைக்காட்டித்தெருவில் உள்ளது என்றால் சரிதான். 1ம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட சொத்து மேற்கு புறமாக தலைவாசல் அமைந்து வெள்ளாலர் தெருவில் உள்ளது என்றால் சரிதான். எனது தாயார் கிரையம் பெற்ற கிரைய சொத்தின் கதவு எண். 9 என்றால் சரிதான். எனது

தகப்பனார் கிரையம் பெற்ற சொத்தின் கதவு எண். 10 என்றால் சரிதான்.

4. எனது தாயார் கிரையம் பெற்ற சொத்து ஒரு ஓட்டுவீடு என்று சொன்னால் சரியல்ல. அது பழைய லாகடம் வீடு ஆகும். மேற்படி வீட்டின் மழைநீர் கடத்தும் பாத்தியம் தாவா சந்தில் இல்லை என்று சொன்னால் சரியல்ல. எனது தகப்பனார் கிரையம் பெற்ற கதவு எண். 10 வீட்டின் மழைநீர் மட்டும்தான் தாவா சந்தில் கடத்தப்படுவதாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல.

5. பி.வா.சா.ஆ.1, 2 ஆவணங்களில் தாவா சந்தில் தூம்பு அமைந்துள்ளதாகவோ அல்லது மழை தண்ணீர் கடத்தும் பாத்தியம் உள்ளதாகவோ குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரியல்ல. மேற்படி சொத்து கட்டப்பட்டு சுமார் எத்தனை வருடங்கள் இருக்கும் என்றால் பழைய கட்டிடம் எனக்கு தெரியாது. எனது சொத்தின் தென்புறம் சுவற்றில் வாசல் கதவுகளோ, ஜன்னல் கதவுகளோ இல்லை என்றால் சரியல்ல. தாவா சந்திற்கு வருவதாக இருந்தால் எனது வீட்டின் கிழக்கே இருந்து தென்வடல் சந்து வழியாகத்தான் செல்லமுடியும் என்றால் சரிதான். மேற்படி சந்திற்கு கழிவு நீர் மற்றும் மழைநீர் சரியாக செல்கிறதா என்பதை கவனிக்க 6 மாதத்திற்கு ஒருமுறை செல்வோம். மேற்படி தென்புற சந்திற்கு கிழக்குபுறமாக சர்க்கரை சேர்வை வீடு உள்ளது என்றால் சரிதான், மற்றொரு நபர் வீடும் உள்ளது.

6. மேற்படி தென்வடல் சந்தில் சர்க்கரை சேர்வை 3 சுவர்களை எழும்பி மேற்படி சந்து பாதையை மறைத்துவிட்டார் என்றால் சரிதான். மேற்படி சர்க்கரை சேர்வைக்கு எதிராக நான் வழக்கு தாக்கல் செய்துள்ளேனா என்றால் வழக்கு எண். 396/2007தாக்கல் செய்துள்ளேன்.

7.வாதி வீட்டிற்கு வடக்கில் உள்ள கிழமேல் சந்து மேற்குபுறமாக வெள்ளாலர் தெருவில் சேர்கிறது என்று சொன்னால் சரிதான். மேற்படி

வெள்ளாலர் தெரு வழியாக தாவா சந்திற்கு வருவதற்கு எனக்கு எந்த பாத்தியமும் இல்லை என்றால் சரியல்ல. மேற்படி வழக்கில் நீதிமன்ற ஆணையாளர் தாவா சொத்தை அறிக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். மேற்படி நீதிமன்ற ஆணையர் அறிக்கை நீ.ம.சா.ஆ. 2 ல் தாவா சந்து என்பது எனது தந்தை கிரையம் பெற்ற சொத்தின் நடு பகுதியுடன் முடிவடைந்ததாக காட்டப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. மேற்படி நீ.ம.சா.ஆ. 1 குறித்து எனது தரப்பில் ஆட்சேபணை தெரிவிக்கவில்லை என்றால் தெரிவித்துள்ளோம்.

8. நீ.ம.சா.ஆ. 2 ல் தூம்பு காட்டப்பட்டுள்ள இடத்தில் தென்பகுதியில் சந்து காட்டப்படவில்லை என்றால் சரிதான். நீ.ம.சா.ஆ.2 தவறானதாகும். 1ம் பிரதிவாதி எனது தந்தை கிரையம் பெற்ற பிறகுதான் அவரது வீட்டை கிரையம் பெற்றார் என்றால் தெரியாது. 2ம் பிரதிவாதி வழக்கு சொத்தின் வாடகைதாரர் என்றால் சரியல்ல. அவரது மாமனார் வீடாகும். பிராது பத்தி 6 ல் 1ம் பிரதிவாதி வீட்டில் 2 ம் பிரதிவாதி ஒத்தி பாத்தியத்தில் அனுபவித்து வந்தார் என்று குறிப்பிட்டுள்ளது என்றால் மாமனார் வீட்டில் ஒத்தியாக இருந்திருக்கலாம்.

9. நீதிமன்ற ஆணையார் ஆய்வு செய்தபோது வழக்கு சந்தில் தண்ணீர் எதுவும் கடத்தப்படவில்லை என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ. 1, 2 ல் குறிப்பிட்டுள்ள சொத்து விபரத்தை நானாகவே ஏற்படுத்திக்கொண்டுள்ளேன் என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதி தூம்பை அடைக்கவில்லை என்றாலும் எனது பாத்தியத்தை தடை செய்யவில்லை என்றாலும் சரியல்ல. 1ம் பிரதிவாதியின் முன்பாத்தியஸ்தர்கள் எவ்வாறு அனுபவம் செய்து வந்தாரோ அதன்படிதான் 1ம் பிரதிவாதி அனுபவம் செய்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. நான் கேட்டுக்கொண்டுள்ள பரிகாரம் எனக்கு கிடைத்தக்கது அல்ல என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை: இல்லை.**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்னதை

தட்டச்சு செய்து அவருக்கு படித்துக்காட்டி

அவர் சரியென்று ஒப்புக்கொண்டு இதில்

கையொப்பமிட்டார்.

ESWARAN MANIKANDAN

Digitally signed by ESWARAN MANIKANDAN
Date: 2026.02.17 11:15:31 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி (FAC),

திருமங்கலம்.